பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 21 | வியாழக்கிழமை | 04.07.2024 | அதிர்வு 338

## தேர்தலை ஒத்திவைக்க ரணில் மீண்டும் முயற்சி

**சஜித் குற்றச்சாட்டு**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அடிமைகளும் அரசமைப்பை மீறி ஜனாதிபதித் தேர்தலை 06▶



# ஐந்து வருடங்கள்தான் ஜனாதிபதியின் பதவி!

## ரணில் உறுதியாகத் தெரிவிப்பு தேர்தல் பிந்தாமல் நடக்குமாம்

"அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள்தான். அதில் சந்தேகம் ஏதும் இல்லை. அதுதான் எனது உறுதியான - தெளிவான நிலைப்பாடு. எனது அந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் அறிவிப்பு ஒன்றை - அறிக்கை ஒன்றை சட்ட முறையாகத் தயாரித்து மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவிக்கும்படி என் சட்டப் பிரிவை அறிவுறுத்தியுள்ளேன். அந்த அறிக்கை விரைவில் மக்களுக்கு வரும்."

- இவ்வாறு நேற்றிரவு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 05▶

## சம்பந்தனின் புகழுடல் இன்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்கு



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் இன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

காலை 10 மணி 05▶




நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் சுமந்திரன் – சாணக்கியன் இணை, ஜனாதிபதி ரணில் விக்க்ரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய விவரங்களை நேற்று இப்பத்தியில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

'இன்று போய் நாளை விவரங்களுடன் வருக..!' – என்று ஜனாதிபதி ரணில் மேற்படி இணையைப் பணித்திருந்தமை குறித்தும் விவரித்திருந்தேன்.

அதன் பிரகாரம் ஜனாதிபதியே 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# வடக்கில் 3 அதிகாரிகளுக்கு ஆளுநர் நியமனம் வழங்கினார்





வடக்கு மாகாணத்திற்கான இரண்டு திணைக்களங்களின் ஆணையாளர் பதவிக்கும், மாகாண பிரதி பிரதம செயலாளர் பதவிக்கும், புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று வழங்கிவைத்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி சி.சுஜீவாவும், வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி கு.காஞ்சனாவும், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) திருமதி.அ.யோ.எழிலரசியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

# சனியன்று தமிழறிஞர் துரைசிங்கம் நினைவு கூரலும் நூல் வெளியீடும்!

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடக்கும்

ஈழத்தில் கல்வித்துறையிலும் இலக்கியப் பணியிலும் அமைதியாக, ஆர்ப்பாட்டமின்றிப் பணியாற்றிச் சென்றவர்களில் குறிப்பிடத்தக்கவர் தமிழறிஞர் த.துரைசிங்கம். அவரை நினைவு கூர்ந்து நூல்வெளியீடு செய்யும் நிகழ்வு, நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.




இலக்கியப் புரவலர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் ஹாசிம் உமர் இந்நிகழ்வில் முன்னிலை வகிப்பார்.

திருமதி.வானதி காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கல்வியமைச்சின் மேனாள் மேலதிகச் செயலாளர் எஸ். தில்லைநடராசா நினைவுரை நிகழ்த்துவார்.

அறிமுகவுரையை மூத்த எழுத்தாளர், மருத்துவர் வி.ரி.இளங்கோவன் வழங்கவுள்ளார். மூத்த பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கம், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், உதவி விரிவுரையாளர் (தேசிய கல்வி நிறுவனம்) திருமதி. கீதா கணேஷ், சமூக ஆய்வாளர் மதுசூதனன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

'இலக்கியப் பரல்கள்' நூல் தொகுதியைப் பெற்றுக் கொள்ளவும் மதிய உணவில் கலந்து கொண்டு சிறப்பிக்கவும் இலக்கிய இரசிகர்கள் அழைக்கப்படுகின்றனர்.




# நுவரெலியா பாதையில் இரண்டு பஸ்கள் மீது தாக்குதல்;
# தனியார் பஸ் சேவைப் புறக்கணிப்பு 3ஆவது நாளாகவும்

**(மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியா பாதையில் இரண்டு பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு தனியார் பஸ்கள் ஆரம்பித்துள்ள பஸ் சேவைப் புறக்கணிப்பு மூன்றாவது நாளாகவும் நேற்றும் இடம்பெற்றது.

“சுபோகிபோகி பஸ்கள் போன்று ரடெல்லா குறுகிய பாதையில் பஸ்களை இயக்கவும், தொலைதூர சேவை பஸ்களை தலவாக்கலை பஸ் நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி செல்வதை நிறுத்தவும், பஸ்களை தாக்கியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் பொறுப்பான துறைகளை கேட்டுக்கொள்கிறோம். நியாயமான தீர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும்” – என வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பஸ் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ் ஊழியர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்பான திணைக்களங்களுடன் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலவாக்கலை நிலையப் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் சந்தருவன் அபேவிக்ரம தெரிவித்தார்.

பஸ் சேவைப் புறக்கணிப்புக் காரணமாக அந்த வழியாக செல்லும் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.








# புத்தளத்தில் இறந்த நிலையில் கரையொதுங்கிய கடலாமைகள்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் ஆழ்கடலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடலாமைகள் கரையொதுங்கி வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் நேற்றுக் காலை உடப்புக்கும் – பெரிய பாட்டுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இரண்டு பெரிய கடல் ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கியுள்ள இரண்டு கடலாமைகளும் சுமார் 3 அடி நீளமும் 25 தொடக்கம் 50 கிலோ கிராம் எடை கொண்டவையாகும் என மீனவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கடலாமைகள் இரண்டும் ஒலிவ் (Olive Redly) வகையைச் சார்ந்தவை என தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று கடந்த வாரமும் உடப்பு முகத்துவாரம் பகுதியிலும் பெரிய கடலாமையொன்று இறந்த நிலையில் கரையொதுங்கி இருந்தது.

கடலாமைகள் கரையொதுங்கியுள்ளமை தொடர்பாக வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை கடற்பரப்பிற்கு வெளியே எம்.வி. எக்ஸ்பிரஸ் கப்பல் தீப்பிடித்து எரிந்ததையடுத்து புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான கடலாமைகள், டொல்பின்கள் மற்றும் திமிங்கிலங்கள் உயிரிழந்த நிலையில் கரையொதிங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரு வெதுப்பகங்களுக்குத் தண்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரண்டு வெதுப்பகங்களுக்கும் ஒரு இலட்சத்து 60ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியில் உள்ள வெதுப்பகங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த மாதம் 12ஆம் திகதி சோதனைக்கு உட்படுத்தியபோது, இரு வெதுப்பகங்கள் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது.

அவற்றுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், கடந்த 24ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது ஒரு வெதுப்பகத்தைத் திருத்த வேலைகள் முடிவடையும் வரை சீல் வைத்து மூட உத்தரவிட்ட மன்று, மற்றைய வெதுப்பக உரிமையாளரை உடனடியாகச் சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பணித்து வழக்கை நேற்றைய தினத்துக்கு ஒத்திவைத்திருந்தது.

அதன் பிரகாரம் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இரண்டு வெதுப்பகங்களும் சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்துள்ளன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மன்றில் அறிக்கை தாக்கல் செய்தார்

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையில் இரண்டு வெதுப்பக உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து மன்று தலா 80 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

## ஐந்து வருடங்கள்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இரவு தமது கொழும்பு – கொள்ளுப்பிட்டி, ஐந்தாவது ஒழுங்க இல்லத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களான எம்.ஏ. சுமந்திரன் – இரா. சாணக்கியன் இணையுடன் சுமார் 2 மணி நேரம் அவர் பேச்சு நடத்தினார். அச்சமயமே இந்தத் தகவலை அவர்களிடம் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை இடைநிறுத்த உத்தரவிடும்படி கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அது ஐந்து நீதியரசர்கள் ஆயத்தின் முன்னால் வருகின்றது என்றார்.

"அந்த மனுவுக்கும் எமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஊடகங்கள் வாயிலாக அப்படி ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அறிந்தேன்" – என்று வெளிப்படையாகப் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "அது ஏன் ஐந்து நீதியரசர்கள் ஆயத்தின் முன் வருகின்றது? அதற்கு ஏதும் விசேட காரணம் உண்டா?" – என்று சுமந்திரனிடம் திருப்பி வினாவினார் எனவும் அறியவந்தது.

"தெரியவில்லை. அது பிரதம நீதியரசரின் தீர்மானம்" – என்று தெளிவுபடுத்தினார் சுமந்திரன்.

"நாங்கள் கொண்டு வந்த 19 ஆவது திருத்தப்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள்தான். அதுதான் எனது உறுதியான நிலைப்பாடு. அதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் தேவையில்லை. ஜனாதிபதியின் ஐந்து வருடப் பதவிக்கால முடிவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் நடக்கும். எனது இந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் அறிக்கையைத் தயாரித்து, என் பெயரில் மக்கள் முன் வைக்குமாறு எனது சட்டப் பிரிவு செயலாளரைப் பணித்துள்ளேன்"– என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் அளித்தார்.

## சம்பந்தனின் புகழுடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதல் மாலை 4 மணி வரை சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்த முடியும் என்று தமிழரசுக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

அதற்கு முன்னர் இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை யாழ். மார்டீன் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் சம்பந்தனின் புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அன்னாரின் புகழுடல் இன்று காலை கொழும்பில் இருந்து யாழ். பலாலிக்கு விமானம் மூலம் எடுத்து வரப்படுகின்றது.

விமானத்தில் சம்பந்தனின் புகழுடலுடன் அன்னாரின் மகள் மற்றும் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வருகின்றனர்.

பலாலி விமான நிலையத்தில் வைத்து அன்னாரின் புகழுடலைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் பொறுப்பேற்பார்.

யாழில் மாலை 4 மணிக்கு அஞ்சலி நிகழ்வு நிறைவடைந்த பின்னர் அன்னாரின் புகழுடல் திருகோணமலைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை முதல் திருகோணமலையில் சம்பந்தனின் இல்லத்தில் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 4 மணியளவில் அன்னாரின் புகழுடல் தகனக்கிரியைக்காகத் திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நேரம் குறித்து தகவல் அனுப்பி இருக்கின்றார் சுமந்திரனுக்கு. 'இரவு எட்டு மணிக்குப் பின்னர் கொள்ளுப்பிட்டி ஐந்தாவது ஒழுங்கையில் உள்ள எனது பூர்வீக இல்லத்தில் ஆறுதலாக இருப்பேன். வந்து சந்தியுங்கள்!' என்று ஜனாதிபதியின் தகவல் சுமந்திரனுக்குத் தெரியப்படுத்தப்பட்டமையை அடுத்து சுமந்திரன் - சாணக்கியன் இணை 8 மணி முதல் இரவு 10 மணி வரை ஜனாதிபதியுடன் விரிவான - திறந்த - நட்புறவான பேச்சுக்களில் ஈடுபட்டது எனத் தெரிகின்றது.

மாகாண சபை தேர்தல் சட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பான தனது தனிநபர் சட்டப் பிரேரணை, அதன் மீதான உயர் நீதிமன்றத் தீர்மானம் போன்றவற்றை ஜனாதிபதியிடம் கையளித்து விளக்கினார் சுமந்திரன்.

### சுமந்திரன் கூறியவை

நாடாளுமன்றப் பதிவில் கிடப்பில் இருக்கும் அந்தச் சட்டமூலத்தை அரசுத் தரப்பு கையில் எடுத்தால், ஒரு மாதத்துக்குள் சாதாரண பெரும்பான்மை மூலம் அதனைச் சட்டமாக்கலாம் என்றார் சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம். இது விடயத்தில் சஜித், அநுர குமார திஸநாயக்க ஆகியோரால் இப்போது வாக்குறுதி மட்டும்தான் தரலாம். அதற்கு மேல் அவர்கள் ஜனாதிபதியாக வந்தால்தான் ஏதும் செய்யலாம். ஆனால் நீங்கள் இன்று ஜனாதிபதி. வாக்குறுதிக்கு அப்பால், அந்த வாக்குறுதி தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளை இப்போது நீங்கள் செயலில் செய்ய ஆரம்பிக்கலாம். அப்படிக் காத்திரமாகச் செயலில் செய்து எமது மக்களுக்கு நம்பிக்கையையூட்டுவீர்களானால் நமது மக்கள் சற்றேனும் உங்களை நம்பும் நிலைமை வரும்.

13ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்துக்கான பூர்வாங்க வேலைகளை நீங்கள் இப்போதே செய்ய ஆரம்பிக்கலாம். அதனை சம்பந்தனின் நினைவாக - அவரின் பெயரில் - முன்னெடுப்பதாக நீங்கள் அறிவித்து அதனைச் செய்யலாம்.

13ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்திற்கு தாங்களும் முழுமையான ஆதரவு என்று பகிரங்கமாக கூறியிருக்கும் சஜித்தோ, அநுரகுமாரவோ அதனால் உங்களின் அத்தகைய நடவடிக்கைகளை இப்போது வெளிப்படையாக எதிர்க்க மாட்டார்கள். எதிர்க்கவும் முடியாது. எதிர்த்தால் தமிழ் மக்கள் முன் அவர்கள் செல்வாக்கிழந்து விடுவர். இப்போது அரசியல் ரீதியில் உங்கள் எதிரி அந்த இருவர்தான். விமல் வீரவன்ஸவோ, உதய கமன்பில்லவோ அல்லர். ஆகவே விமல், உதய கமன்பில்ல போன்றோரின் குரலைப் புறமொதுக்கி விட்டு, இதில் காரிய மாற்றுங்கள்.

13 ஆவது திருத்தத்தில் பகிரப்பட்ட பல அதிகாரங்கள் சட்டத்தின் மூலம் மீளப் பிடுங்கப்பட்டு விட்டன. அவற்றை மீளவும் சட்டங்கள் கொண்டு வந்து திரும்ப கையளிக்க வேண்டும். அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை நீங்கள் இப்போது எடுக்கலாம்.

தேசிய பாடசாலைகள், தேசிய மருத்துவமனைகள் என்று பல விடயங்கள் சட்டங்கள் இல்லாமலேயே மாகாணங்களிடமிருந்து பிடுங்கப்பட்டுள்ளன. அவற்றை இப்போதே நீங்கள் மாகாணங்களுக்குத் திரும்ப அளிக்கலாம்.

13 ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட பல அதிகார விடயங்களில், சட்டமாக்கல் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்க, அவற்றை நிறைவேற்றும் பொறுப்பை ஜனாதிபதி தமது நிறைவேற்றதிகாரம் மூலம் மாகாணங்களுக்குக் கையளிக்கலாம் என்று நீங்களே கூறி உள்ளீர்கள். அதை இப்போதே நீங்கள் செய்யலாம்.

மாகாணக் காணி ஆணைக் குழுக்களை ஸ்தாபித்தால் காணி அதிகாரம் தன் பாட்டில் மாகாணங்களுக்கு வந்து விடும் என்று நீங்களே கூறினீர்கள். அந்த மாகாணக் காணி ஆணைக் குழுக்களை அமைப்பதற்கான சட்டமூலம் இப்போது தயாராக இருப்பதாக நீங்கள் கூறுவதால் அதை உடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுங்கள்.

இன்னும் மூன்று மாதங்கள்தான் உங்களுக்கு உள்ளன. முதல் மாதத்திலேயே விடயங்களை - இனியும் இழுத்தடித்து ஒத்திப்போடாமல் விரைந்து செய்யுங்கள். செயலில் காட்டுங்கள். அவற்றையும் - அனைத்தையும் - சம்பந்தனின் நினைவாகச் செய்வதாகக் கூறி முன்னெடுங்கள். அவை எமது மக்களின் மனதில் நம்பிக்கையையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

இவை தொடர்பான சட்ட விடயங்களை உடன் கவனித்து, தாமதமின்றி முன்னெடுப்பதற்கு நீங்கள் முன்வந்தால், அவை தொடர்பாக எனது பங்களிப்பு, உதவி, ஒத்தாசை, முழுமையாக இருக்கும் - என்று சுமந்திரன் விவரித்தார்.

இவை தொடர்பில் சாதகமான சமிக்ஞைகளை ஜனாதிபதி காட்டினார் என்று சுமந்திரன் பின்னர் குறிப்பிட்டார்.

"பந்து இப்போது ஜனாதிபதியின் களத்துக்குள். அவர் சீரியஸாக விடயங்களை எடுத்து முன் நகர்த்தினால் அவருக்கும் நல்லது. தமிழ் மக்களுக்கும் நல்லது.

"சஜித்தும் அநுரகுமாரவும் இப்போது வாக்குறுதிதான் தரலாம், நீங்கள் அதையும் தாண்டி செயலில் சில முன நடவடிக்கைகளை எடுத்து நம்பிக்கையை ஏற்படுத்தலாம், அந்த சாதக நிலையை சமயோசிதமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான் கூறியமை ஜனாதிபதியின் மனதில் ஆழத் தைத்திருக்கின்றமையை நான் உணர்ந்து கொண்டேன்" என்றார் சுமந்திரன்.

சாதக பிரதிபலிப்புகளை உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் அவர் காட்டினால் நல்லது. இல்லையேல், வழமை போல அவ்வப்போது அவர் பறக்கவிடும் பலூன்களில் ஒன்றாக இந்த முயற்சியையும் கருதி கைவிட வேண்டியதுதான் என்ற சாரப் பட சுமந்திரன் கருத்து வெளியிட்டார்.

ரணில் எப்படிப் பந்தை விளையாடப் போகின்றார்? அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் விடயம் தெளிவாகும். அதுவரைப் பார்த்திருப்போம்.

---

## தேர்தலை ஒத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒத்திவைக்க மீண்டும் முயற்சித்து வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் அரசின் சதி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் இருந்து நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த காலங்களில் ஜனாதிபதியையும் அரசையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அடிமைகளும், கையாட்களும், சகாக்களும் நாட்டுக்கு எதிர்மறையான செய்திகளை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்ற கருத்தை உருவாக்கி வந்தனர்.

பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல என மக்களை நம்பவைக்கும் வகையில் அரசியல் செயற்திட்டமொன்றை முன்னெடுக்க ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமான குழுக்களும் முயற்சித்தன.

இவ்வாறான நிலையில் இன்று சட்ட ரீதியாகவும் அரசமைப்பு ரீதியாகவும் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை பறிக்க மேலும் பல முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசமைப்பை மீறும் சதிகளாகும்.

எதிர்வரும் செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசமைப்பு தெளிவாகக் கூறினாலும், அரமைப்பு ரீதியாக புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமையை இல்லாதொழித்து, சீர்குலைக்கச் சில குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமையும் மக்களின் வாக்குரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மாளிகைகளுக்குள் இருந்து கொண்டு மானங்கெட்ட சதிகள் மூலம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பின்னணி தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், இந்நாட்டில் ஜனநாயகத்தின் மரணத்தை முன்னெடுக்க வேண்டாம் எனப் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். தேர்தல் உரிமையை உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறேன்.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சுதந்திரமான மற்றும் ஜனநாயக ரீதியாக தேர்தலொன்றை நடத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளையும், ஜனநாயகம் என்ற பெயரில் பயப்படாமலும், அடிமைப்படாமலும் 220 இலட்சம் நாட்டு மக்களுக்காக வேண்டி எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு மற்றும் இது தொடர்பான அனைத்து அதிகாரிகளிடமும் மரியாதையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அரச இல்லங்களில் நடக்கும் சதிகளை முறியடிக்க வேண்டும். இதன் பொருட்டு அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி, மக்களை முன்னிலைப்படுத்திக் கொண்டு ஜனநாயகத்தை பாதுகாக்கும் பயணத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் தயார்." - என்றார்.




# ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதை தடுக்க கோரி அடிப்படை உரிமை மனு

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி உயர் நீதிமன்றில் வர்த்தகர் ஒருவரினால் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு உரிய காலத்தைக் கண்டறிந்து நீதிமன்றம் விளக்கும் வரையில், உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல் நடத்தப்படுவதைத் தடுக்குமாறு இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.



# பியூமியின் 19 வங்கிக் கணக்குகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை

பிரபல நடிகை பியூமி ஹன்சமாலியின் 19 வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி வங்கிக் கணக்குகள் தொடர்பான அறிக்கையை விரைவாக வழங்குமாறு உரிய நிதி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து, தேவையேற்படும் பட்சத்தில் பியூமி ஹன்சமாலியிடமும் வாக்குமூலம் பெறப்படுமென சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு தெரிவித்துள்ளது.

பியூமி ஹன்சமாலி, குற்றப்புலனாய்வு சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவிற்கு கடந்த திங்கள் கிழமை சென்றிருந்தார்.

அவர் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களை ஈட்டியுள்ளமை தொடர்பான முறைப்பாட்டிற்கு அமைய முன்னெடுக்கப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் சென்றிருந்தார்.

அவர் அன்றைய தினம் வங்கிக் கணக்குகள் தொடர்பான தரவுகளையும் எடுத்துச் சென்றிருந்தார்.

இதனிடையே, அன்றைய தினம் பியூமி ஹன்சமாலி வாக்குமூலம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டிருக்கவில்லை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய, அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மனுவால் மாற்றம் வருமா?

வரும் 17ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பைத் தேர்தல் ஆணையம் விடுக்கலாம். விடுக்கும். அதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் கூட இல்லை.

அத்தோடு அந்தத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் நியாயாதிக்கச் செயற்பாடுகள் தொடங்கிவிடும். அந்தத் தேர்தல் தொடர்பான சட்டங்கள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதை தேர்தல் ஆணையம் கவனிக்கும். கவனிக்க வேண்டும்.

அதற்கிடையில் 'சிவ பூஜையில் கரடி புகுந்த மாதிரி' ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிடுவதைத் தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் முரண்பாடுகள் உள்ளன எனவும், இது தொடர்பிலான அரசமைப்புச் சிக்கல் தீர்க்கப்படும் வரை தேர்தலுக்கான திகதி அறிவிப்பை ஒத்தி வைப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியே இந்த மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது

வர்த்தகரும் சட்டத்துறை பட்டதாரியுமான சி.டி.லீனா என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு வரும் திங்கட்கிழமை 8 ஆம் திகதி ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றத்தின் விசேட ஆயம் முன் விசாரணைக்கு வர உள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மனு மீதான விசாரணைகள் முடிவடையும் வரை தேர்தல் திகதி அறிவிப்பு ஒத்தி வைக்கப்பட வேண்டுமென இடைக்கால உத்தரவையும் மனுதாரர் கோரியுள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 வருடத்திலிருந்து 5 வருடங்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தமது மனுவில் குறிப்பிடும் மனுதாரர், இதன்மூலம் மக்களின் இறையாண்மை மீறப்பட்டுள்ளதாகவும், அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

இதுதான் மனுதாரரின் பிரதான வாதம் என்று தெரிகின்றது. இந்த வாதம் உயர் நீதிமன்றத்திடம் எடுபடுமா என்ற கேள்விதான் இந்த விவகாரத்தில் முக்கியமானது.

அரசமைப்புக்கு பொருள் கூறுவதும், வியாக்கியானம் செய்வதும் உயர்நீதிமன்றத்தின் பணி. அம்மன்றுக்கு விசேடமாக - தனித்துவமாக - உள்ள நியாயாதிக்கம் அது.

ஆனால், அதற்காக அரசமைப்பில் ஏற்கனவே சேர்த்துக் கொள்ளப்பட்ட திருத்தங்கள், மாற்றங்கள், நீக்கங்கள் சட்டரீதியானவையா, முறையாக செய்யப்பட்டவையா என்பவற்றையெல்லாம் விசாரிக்கும் வேலைக்குள் உயர்நீதிமன்றம் இறங்குமா என்பதுதான் கேள்வி.

அப்படி இறங்க உயர் நீதிமன்றம் மறுக்குமானால் மனுதாரரின் இந்த விண்ணப்பம் விசாரணைக்கு ஏற்கப்படாமலேயே தள்ளப்பட்டு விடும் என்பதுதான் சட்ட வட்டாரங்களின் கணிப்பு.

ஏற்கனவே நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட முறைமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீது உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

ஒரு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்பட்டது என சபாநாயகர் சான்றுரைத்து விட்டால், அதன் பின் அந்தச் சட்டத்தின் செல்லுபடி தன்மையைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்ற அரசமைப்பு ஏற்பாட்டை சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையில், ஏற்கனவே தவறான முறையில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் அச்சட்டத்தின் செல்லுபடி தன்மையை கேள்விக்கு உட்படுத்த மறுத்துவிட்டது உயர் நீதிமன்றம்.

இரண்டு மாதங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட சாதாரண சட்ட விடயத்திலேயே அப்படித் தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம், 2015 இல் - 9 வருடங்களுக்கு முன் - நாடாளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்பட்டது என சான்றளித்த 19ஆவது அரசமைப்பு திருத்தத்தின் செல்லுபடி தன்மை குறித்து - அந்தத் திருத்தம் முறையாகக் கொண்டுவரப்பட்டதா என்று சர்ச்சை குறித்து - கேள்வி எழுப்பி விசாரிப்பதற்கு இடம் அளிக்க மாட்டாது என்று நம்பலாம்.

ஆகையினால் இந்த மனு, வரக்கூடிய தேர்தல் தொடர்பான விடயத்தில் பெரிய மாற்றம் எதையும் கொண்டுவருவது துர்லபமே.

# நீட் தேர்வு தேவையில்லை

## மாணவர்களுக்கான விருது விழாவில் த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு

"நீட் தேர்வால் ஏழை, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தத் தேர்வு மாநில அரசுகளின் உரிமைகளுக்கு எதிரானது. நீட் தேர்வு தேவையில்லை என்பது தான் எனது கருத்து."

– இவ்வாறு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 2 ஆவது ஆண்டாக மாணவர்களுக்கு கல்வி விருது வழங்கும் விழா இடம்பெற்றது. இரண்டாம் கட்டமாக சென்னை திருவான்மியூரில் நேற்று நடந்த விழாவில் நடிகர் விஜய் கலந்து கொண்டு உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

நீட் தேர்வால் ஏழை, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நீட் தேர்வில் நான் மூன்று முக்கியப் பிரச்சினைகளைக் காண்கிறேன். முதலாவதாக நீட் தேர்வு மாநில உரிமைகளுக்கு எதிரானதாக இருக்கிறது. கல்வி என்பது முன்பு மாநிலப் பட்டியலில் இருந்தது. அதை எப்பொழுது ஒன்றிய அரசு பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வந்ததோ அப்போதுதான் இந்த சிக்கல் ஏற்பட்டது.

ஒரே நாடு, ஒரே பாடத்திட்டம், ஒரே தேர்வு என்பதை அடிப்படையில் கல்வி கற்றலுக்கே எதிரான விஷயமாக நான் பார்க்கிறேன். ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஏற்றவாறு பாடத்திட்டம் இருக்க வேண்டும். பன்முகத்தன்மை என்பது பலமே தவிர பலவீனம் அல்ல, மாநில பாடத்திட்டத்தில் படித்துவிட்டு என்சிஆர்டி பாடத்திட்டத்தின்படி நடத்தப்படும் தேர்வை எப்படி எல்லோராலும் சமமாக எழுத முடியும். அதுவும் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வை எழுதுவது என்பதை யோசித்துப் பாருங்கள்.

மூன்றாவதாக, நீட் தேர்வு குளறுபடிகள் பற்றி நாம் நிறைய செய்திகளை வாசித்தோம். அதன்மூலம் நீட் தேர்வு மீதான நம்பகத்தன்மையே மக்களுக்குப் போய்விட்டது. நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் ஊடகச் செய்திகள் மூலமாக நாம் புரிந்து கொண்ட விஷயமாக உள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு நீட் விலக்கு மட்டுமே. நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தமிழக அரசு கொண்டு வந்த சட்டப்பேரவை தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஒன்றிய அரசு இதன் மீது காலதாமதம் செய்யாமல் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.



நீட் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன். ஒருவேளை அதில் நடைமுறை சிக்கல் இருந்தால் இடைக்கால தீர்வாக அரசியலமைப்பு சட்டத்தை திருத்தம் கொண்டு வந்து சிறப்புப் பொதுப் பட்டியலை உருவாக்கி, அதில் கல்வி மற்றும் சுகாதாரத்தைச் சேர்க்க வேண்டும். மாநில அரசுகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கும் சிறப்புப் பொதுப் பட்டியலை உருவாக்க வேண்டும் என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோள்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் எய்ம்ஸ், ஜிப்மர், பி.ஜி.ஐ. போன்ற நிறுவனங்களில் வேண்டுமானால் அவர்கள் நீட் தேர்வை நடத்திக் கொள்ளட்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நீட் விலக்கு தேவை என்பதை எனது பரிந்துரையாகப் பகிர்ந்து கொண்டேன். இது நடக்குமா? நடக்கவிடுவார்களா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. எனது பார்வையைப் பகிர்ந்து கொண்டேன்.

எனவே, மாணவர்களே நீங்கள் மகிழ்ச்சியாகப் படியுங்கள். எந்த அழுத்தத்தையும் எடுத்துக் கொள்ளாதீர்கள். இந்த உலகம் மிகப் பெரியது. அதில் நிறைய வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. ஏதாவது ஒருசில விஷயத்தில் தோற்றால் அதில் முடங்கிவிடாதீர்கள். தோல்வி கண்டால், கடவுள் இன்னும் நிறைய வாய்ப்புகளை உங்களுக்காக வைத்துக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். அது என்னவென்பதைக் கண்டுபிடியுங்கள். நம்பிக்கையுடன் இருங்கள். வெற்றி நிச்சயம்."– என்றார்.

# ஹாத்ரஸ் நெரிசல் சம்பவம் தொடர்பில் நீதி விசாரணை; உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவு

ஹாத்ரஸ் மாவட்டத்தில் நிகழ்ந்த கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் தொடர்பாக சிறப்பு விசாரணைக் குழு அமைத்துள்ளோம் என்று உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தச் சம்பவத்தை பல கோணங்களில் விசாரிக்க வண்டியுள்ளதால் நீதி விசாரணை நடத்தவும் மாநில அரசு முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய யோகி ஆதித்யநாத்,

"மீட்பு நடவடிக்கையில் கவனம் செலுத்துவதே எங்கள் முன்னுரிமை. மொத்தம் 121 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்கள், உத்தரப் பிரதேசம், ஹரியாணா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். உயிரிழந்த 121 பேரில் 6 பேர் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இந்த விபத்தில் காயமடைந்த 31 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் யாரும் ஆபத்தான நிலையில் இல்லை.

சம்பவத்தை நேரில் பார்த்த பலர் என்னிடம் பேசினார்கள். நிகழ்ச்சி நடந்து முடிந்து சொற்பொழிவாளர் கீழே இறங்கி வந்துள்ளார். அப்போது, பக்தர்கள் குறிப்பாக பெண்கள் அவரது பாதத்தை தொட்டு வணங்கி ஆசிர்வாதம் பெறுவதற்காக முயன்றனர் எனவும் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் இருந்த தன்னார்வ தொண்டர்கள், அவர்களை தடுத்து நிறுத்தியுள்ளனர் ஏற்றும் அப்போது ஏற்பட்ட நெரிசல் காரணமாகவே இந்தச் சம்பவம் நடந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சிறப்பு விசாரணைக் குழு அமைத்துள்ளோம். அது முதற்கட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து ஆழமாக விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறேன். பல கோணங்களில் விசாரிக்க வேண்டியுள்ளது. நீதி விசாரணை நடத்தவும் மாநில அரசு முடிவு செய்துள்ளது.



ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் இந்த விசாரணை நடைபெறும். நிர்வாகம் மற்றும் காவல் துறையின் மூத்த அதிகாரிகள் இந்த நீதி விசாரணைக் குழுவில் ஒரு அங்கமாக இருப்பார்கள்.

சம்பவ இடத்தில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பார்வையிட சம்பவ இடத்துக்குச் சென்றேன். எங்கள் 3 அமைச்சர்கள் நேற்று முதல் அங்கு முகாமிட்டுள்ளனர். தலைமைச் செயலாளர் மற்றும் பொலிஸ் தலைமை இயக்குநரும் நேற்று முன்தினம் முதல் இங்கு முகாமிட்டுள்ளனர். மூத்த பொலிஸ் அதிகாரிகள், நிர்வாகப் பிரிவில் உள்ள மூத்த அதிகாரிகள் ஆகியோர் ஏற்கெனவே அங்கு முகாமிட்டுள்ளனர். சம்பவத்துக்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை உறுதி செய்யும் திசையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆரம்பகட்ட விசாரணைக்குப் பிறகு, நாங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்போம்.

மாநில அரசும், மத்திய அரசும் நிவாரண உதவிகளை அறிவித்துள்ளன. இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபாவும், காயம் அடைந்தவர்களுக்கு 1 லட்சம் ரூபாவும் நிவாரணமாக வழங்கப்படும். உயிரிழந்தவர்களின் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்விச் செலவை உத்தரப் பிரதேச அரசே ஏற்கும்."– என்றார்.

# பிரித்தானிய பொதுத் தேர்தல் இன்று; 14 வருட ஆட்சி முடிவுக்கு வருமா?

பிரித்தானிய பொதுத் தேர்தல் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், புலம்பெயர்ந்த வாக்காளர்களும் வாக்களிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிலிருந்து நைஜீரியா, இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயர்ந்த வர்களும் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பொதுத் தேர்தல் நாளை நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அண்மையில் அறிவித்தி ருந்த நிலையில் கடந்த மே 30 ஆம் திகதி பிரித்தானிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உரிய காலத்திற்கு முன்னதா கவே தேர்தலை நடத்தும் பிரித்தானிய பிரதமரின் தீர்மானத் திற்கு கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், பிரித்தானிய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் கடந்த மே 24 ஆம் திகதி முதல் இடைநிறுத் தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற இடைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது.

பொதுத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான கருத்துக் கணிப்புகளின்படி ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி 21 சதவீத ஆதரவு வாக்குகளை மாத்திரமே பெறுவதற்



கான வாய்ப்புகள் இருக்கின்றன என அந்த நாட்டின் சமூக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தால் முதல் 100 நாள்களில் பிரித்தானியா மீளமுடியாதொரு நெருக்கடிக்குள் தள்ளப்படும் என அந்த நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்ததும் வரி அதிகரிக்கும் என்றும் சட்டவிரோதமான முறையில் புலம்பெயர்ந்தோர் மீண்டும் பிரித்தானியாவிற்குள் அனும திக்கப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இன்று இடம்பெறும் பொதுத் தேர்தலில் ரிஷி சுனக் தலை மையிலான கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வியைச் சந்திக்க நேரிடும் என வெளியான கருத்துக்களைத் தொடர்ந்து ரிஷி சுனக் தொழிலாளர் கட்சியை இவ்வாறு விமர்சித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல்: கமலா ஹாரிஸுக்கு மக்கள் ஆதரவு!



அமெரிக்காவின் துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அதில் அவர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின் றன என பிரபல ஊடகமொன்று முன்னெடுத்த கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

மேற்படி கருத்துக்கணிப்பின்படி, ட்ரம்பா? பைடனா? என்ற கேள்விக்கு 49 சதவீதம் பேர் ட்ரம்புக்கும், 43 சதவீதம் பேர் பைடனுக்கும் ஆதரவளித்துள்ளனர்.

அதேசமயம், ட்ரம்பா அல்லது கமலா ஹாரிஸா என்ற கேள்விக்கு 47 சதவீதம் பேர் ட்ரம்புக்கும், 45 சதவீதம் பேர் கமலா ஹாரிஸுக்கும் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

மேலும், கமலா ஹாரிஸுக்கு பெண் வாக்காளர்க ளின் ஆதரவு கணிசமாக உள்ளதாகவும், இதனால் அவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசா நகரில் இஸ்ரேல் வான்வழித்தாக்குதல்






காசா நகரின் அல்-ஜலா தெருவை நோக்கி இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 5 பாலஸ்தீ னர்கள் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இதில் காயமடைந்த அனைவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அதே நேரத்தில் காசா பகுதிக்கு தெற்கே உள்ள கிழக்கு கான் யூனிசில் வசிப்பவர்களை உடனடியாக வெளியேறு மாறு இஸ்ரேல் இராணுவம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ செய்தித்தொடர்பாளர் அவிச் சாய் அட்ரே தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கான் யூனிசின் கிழக்கே உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களை உடனடியாக மனிதாபிமான மண்டலத்திற்கு வெளியேற்றுமாறு வலியுறுத்தியுள்ளார்.




# இனிமேல் ரஷ்ய, இந்திய நிறுவனங்களின் நிர்வாகத்தில் மத்தளை விமான நிலையம்

மத்தளை விமான நிலையத்தை முகாமைச் செய்யும் பொறுப்பினை ரஷ்யா மற்றும் இந்திய நிறுவனங்க கையேற்கவிருக்கின்றன என விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியாகி உள்ளன என்றும் தெரிவித்தார்.

209 மில்லியன் டொலர்கள் முதலீட்டில் உருவாக்கப்பட்ட இந்த விமான நிலையம், விமானப்போக்குவரத்து போதியளவில் இல்லாததன் காரணமாக, நட்டங்களை எதிர்நோக்கி இருந்தது.

இந்த நிலையில், இந்திய மற்றும் ரஷ்யாவின் கூட்டு நிர்வாகத்திற்காக இந்த விமான நிலையம் கையளிக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஓரிரு வாரங்களில் அந்த நாடுகளின் இரண்டு நிறுவனங்கள் மத்தளை விமான நிலையத்தைப் பொறுப்பேற்கவுள்ளன.

# சிறுமிகள் காதல் என்ற மயக்கத்தில் துஷ்பிரயோகத்துக்குள்ளாகின்றனர்

## பிரதி பொலிஸ் மா அதிபர் தகவல்




16 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் 85 வீதமானோர் காதல் என்ற பெயரில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகின்றனர் எனஒ பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்குத் தெரிவிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு மாபெரும் பொறுப்பு உள்ளது எனவும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க முயற்சி எடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் காலம் நாளையுடன் நிறைவடையவுள்ளது



2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் காலம் நாளையுடன் நிறைவடையவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனவே, உரிய காலப்பகுதிக்குள் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை இணையவழியில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

அதற்கமைய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் விற்பனை செய்யப்படவில்லையாம்

## விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தகவல்

"ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படவில்லை. மறுசீரமைப்பு பணிகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்ட ரீதியில் கூட ஸ்ரீலங்கன் எயாலைன்ஸின் 49 வீதம் மட்டுமே வேறொரு நிறுவனத்திற்கு வழங்க முடியும். அதற்காக இதுவரை எவரும் முன்வரவில்லை."

–இவ்வாறு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். அரசியல் காரணங்களுக்காக, எதிர்க்கட்சிகள் இது நற்செய்தி அல்ல என்று கூறினாலும், நாட்டைப் பற்றி சிந்தித்தால், இது மிகவும் ஒரு நற்செய்தி என்பதைக் கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் யாருடைய முகத்தையும் பார்க்காமல், சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் மாத்திரமே மறுசீரமைப்பு செயல்பாட்டில் ஈடுபடுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கூற்றுப்படி, ஆர்ஜென்டீனா, ஈக்வடோர் மற்றும் கானாவில், இருதரப்புக் கடன்களுக்காக அன்றி, வர்த்தகக் கடன்களுக்கே 25 வீத கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எமது வர்த்தகக் கடனை மறுசீரமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் நாம் இன்னும் ஈடுபட்டு வருகின்றோம். அவரது அறியாமையால், இன்னும் முடிவு எட்டப்படாத ஒரு விடயத்தைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வலிமைக்கு ஏற்பவே இதனைச் செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி இந்த அளவுகோல்கள் மாறுகின்றன. இவ்வாறான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொள்ளாமல் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுவது ஏற்புடையதல்ல என்பதைக் கூற வேண்டும்.

இந்த நாட்டை பேரழிவில் இருந்து மீட்பதற்கான முதல் அடியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்துள்ளார். இரண்டாவது படி, அதைப் பாதுகாத்து முன்னேறுவதாகும். இல்லையேல் நாடு 02 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலைக்கு திரும்புவதை தடுக்க முடியாது. இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் மாகாண சபைகள், பிரதேச சபைகள், அரச திணைக்களங்கள் மற்றும் நலன்புரி போன்ற சமூக பாதுகாப்பு நலன்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அவற்றின் செயற்பாடுகள் தேர்தலை எதிர்பார்த்து செய்யப்படுவதில்லை.

நாம் ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைக்கும் பணிகளையே நாம் மேற்கொள்கின்றோம் மாறாக அதனை விற்கவில்லை.

இலங்கையின் சட்டத்தின் படி ஸ்ரீலங்கன் விமான சேவையில் 49 வீதம் மட்டுமே வேறு நிறுவனத்திற்கு வழங்க முடியும். அதற்கும் சர்வதேச அளவில் குறைந்தபட்ச ஆர்வமே உள்ளது. அதற்கு 06 நபர்களே முன்வந்துள்ளனர். அவர்களில் பொருத்தமான எவரையும் நாங்கள் இனங் காணவில்லை. இலங்கை தொழில்முனைவோருக்கு வழங்குவதாக இருந்தாலும் அவர்களும் அவர்களது இயலுமையை நிரூபிக்க வேண்டும். மேலும், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் அடுத்த வாரம் தமது திட்டங்களை மீண்டும் தொடங்குவது குறித்து கலந்துரையாட உள்ளது.

இது கடன் மறுசீரமைப்பின் மற்றொரு நன்மையாகும். விமான நிலையத் திட்டத்துக்கு சீன நிறுவனங்கள் முன் வந்தாலும் ஜப்பானுடன் செய்து கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், அந்த ஒப்பந்தங்கள் ஜப்பானிய நிறுவனங்களுக்கே வழங்கப்பட வேண்டும். மேலும், பாரிய நட்டத்தை சந்தித்து வரும் மத்தளை விமான நிலையத்தின் நிர்வாகம் அடுத்த சில வாரங்களில் ரஷ்ய–இந்திய கூட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தியாவின் 69 மில்லியன் டொலர் நிதியுதவியின் கீழ் காங்கேசந்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் சேவை மிக விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என என்னிடம் தெரிவித்தார்." – என்றார்.

# ஒழுக்கமின்றி நாட்டின் கல்வியை முன்னெடுத்துச் செல்ல முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு










ஆசிரியர் பணியில் இணைந்து கொள்ளும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தமது சேவைகளை அர்ப்பணிக்க வேண்டும். ஒழுக்கமின்றி ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 60 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டமையுடன் 1,706 பட்டதாரிகளுக்கும் 453 ஆங்கில டிப்ளோமா பெற்றவர்களுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாளமாக சில நியமனங்களை இதன்போது வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் சேவையில் நுழையும் உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். இன்று நீங்கள் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்கிறீர்கள். கடந்த இரண்டு வருடங்களில் நாடு வங்குரோத்தடைந்த போதும், அந்த வங்குரோத்து நிலையில் இருந்து வெளிவர நடவடிக்கை எடுத்த போதும் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. வெற்றிடங்களுக்காக மாத்திரமன்றி மேலதிகமாகவும் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தோம். இக்கட்டான காலங்களிலும் நாட்டின் எதிர்காலத்தை மையமாக வைத்து இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நம் எதிர்காலம் நம் குழந்தைகள் தான். அதனால்தான், மாறிவரும் உலகில் புதிய அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவுடன் எதிர்கால சந்ததியினரைப் பலப்படுத்த அரசு செயல்பட்டு வருகிறது. அது நம் அனைவரின் பொறுப்பாகும்.

எனவே, கௌரவமான தொழிலில் ஈடுபடும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தங்கள் சேவையை அர்ப்பணிக்க வேண்டும். ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஒழுக்கம் இல்லாமல் ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது. உங்கள் வகுப்பறையில் 40 – 50 மாணவர்கள் இருக்கலாம். ஆனால் ஆசிரியருக்கும் இராணுவ அதிகாரிக்கும் வித்தியாசம் உண்டு. இராணுவ அதிகாரிகளின் கீழ் பயிற்சி பெற்ற மூத்தவர்கள் உள்ளனர். ஆனால் உங்களிடம் 18 வயதுக்குட்பட்ட நபர்களே உள்ளனர். இதில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும். நாட்டின் கல்வியைப் பாதுகாக்காது, கல்வி முறையை சீர்குலைத்தால், நம் எதிர்கால சந்ததியை இழக்க நேரிடும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, நாம் வேகமாக முன்னேற வேண்டும். 85 பில்லியன் டொலர்களாக இருந்த நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடுத்த 20 - 25 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 350 பில்லியன் டொலர்களாக உயர்த்த முயற்சிக்க வேண்டும். இது நமது எதிர்கால சந்ததியினருக்காக செய்யப்பட வேண்டும்.

அதற்கிணங்க குழந்தைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும். ஆசிரிய சேவை என்பது மற்ற சேவைகளில் இருந்து வேறுபட்ட சேவை என்றே சொல்ல வேண்டும். அந்த கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தற்பொழுது பாடசாலைகளின் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும். பாடசாலைகளில் நடக்கும் இந்த வேலை நிறுத்தங்கள் நல்லதல்ல. அப்படி வேலைநிறுத்தம் செய்வதற்கு எந்த காரணமும் இல்லை. 2022ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவொன்றை வழங்கினோம். நாட்டின் பொருளாதார சூழ்நிலையில், அதற்கு மேல் வழங்க முடியாது. அதன்பிறகு, சில தொழிற்சங்கங்கள் இதை மறுபரிசீலனை செய்து கூடுதலாக வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கோருவது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அவர்களுக்கு இரண்டு சம்பள உயர்வு வழங்கினோம்.

அண்மையில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் வகுப்பறைக்கு வரவில்லை. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக

தொடர்ச்சி ▼

# ஒழுக்கமின்றி நாட்டின் கல்வியை முன்னெடுத்துச் செல்ல முடியாது













தொடர்ச்சி▲

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய மக்களும் வந்து, கூச்சலிட்டு, ஜனாதிபதி அலுவலகத்திற்கு வர முயற்சி செய்தனர். வீதித் தடைகளை தள்ளி, கண்ணீர் புகைக்குண்டுக்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது ஒரு புதிய நிகழ்வு அல்ல. ஆனால் கௌரவமான தொழிலுக்கு அது பொருந்தாது.

அன்று, ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, வரவுப் பதிவுகளில் கையெழுத்திடாமல் பிள்ளைகளுக்கு பாடம் நடத்தினார்கள். சில நாடுகளில் கருப்பு பட்டியுடன் கற்பிக்கின்றனர். ஆனால் அண்மையில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் முற்றிலும் மாறுபட்டது.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் இந்நிலை காணப்படவில்லை. பிள்ளைகளுக்கான கல்வி நடவடிக்கைகளை நடத்தினர். அத்துடன் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் உரிய முறையில் பேணப்பட்டன.

ஆனால், அனைத்து சிங்கள மொழிமூலப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. சாதாரண கிராமங்களைச் சேர்ந்த ஏழைப் பிள்ளைகள் இந்தப் பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இதுவா ஆசிரியர் பணியின் பொறுப்பு? என்று கேள்வி எழுப்ப விரும்புகிறேன். தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளனர். நுவரெலியா போன்ற பிரதேசங்களில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் நடைபெறாத போது தமிழ் மொழிப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தன. இவ்வாறான நிலை நாட்டில் ஏற்படக் கூடாது.

சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பாடசாலைக்கு வரக்கூடாது என மிரட்டல் விடுத்தனர். அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதேபோன்று அவர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் என்று எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சாட்டுகின்றனர். இது ஒரு நல்ல நிலைமை இல்லை.

முற்பகல் 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை யாரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க முடியாது. இது தொடர்பான பரிந்துரையொன்றை வழங்குமாறு நான் சட்டமா அதிபரிடம் தெரிவித்தேன். பாடசாலையை மூடுவதன் மூலமோ, வேலை நிறுத்தம் செய்வதன் மூலமோ பிள்ளைகளின் கல்வியை யாரும் சீர்குலைக்க முடியாது. எதிர்கால சந்ததியினருக்காக நாம் அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்

மேலும், ஆசிரியர் இடமாற்றல் முறையை கணினி மூலம் செய்யலாமா என்பது குறித்து அமைச்சரிடம் நேற்று கலந்துரையாடினேன். பதவி உயர்வு அல்லது ஆசிரியர்கள் தொடர்பில் யாருக்கும் அநீதி இழைக்க அனுமதிக்க முடியாது. அதேபோன்று, இதற்குப் பின்னர் இவ்விடயம் தொடர்பில் கடுமையாக செயல்பட வேண்டியேற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிலருக்கு என் மீது கோபம் ஏற்படலாம். ஆனால் அதுதான் யதார்த்தம். நாம் நமது பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, பிள்ளைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்துமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த நாசகார செயல்களுக்கு துணைபோக வேண்டாம் என எதிர்க்கட்சிகளிடம் முக்கிய வேண்டுகோள் விடுக்கிறேன். ஏனெனில் மக்களினதும் பெற்றோர்களினதும் குரலுக்கு செவிசாய்த்து செயல்பட வேண்டும். இன்று ஆசிரியர் தொழிலில் பிரவேசித்த உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.” – என்றார்.

# சுங்கப் பணியாளர்கள் இன்று போராட்டம்




சுங்கத் திணைக்களப் பணியாளர்கள் சங்கம் இன்று தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

சுங்கத்திணைக்களம், வருமான வரி திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றை இணைத்து ஒரே நிறுவனமாக மாற்ற முயற்சிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழாய்வு இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழாய்வின் மூன்றாம் கட்டப்பணிகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த மே 16 ஆம் திகதியன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அகழாய்வு மீண்டும் இன்று ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29 ஆம் திகதியன்று கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தை தோண்டிய போது மனிதப் புதைகுழியொன்று அடையாளம் காணப்பட்டது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரிகளின் கண்காணிப்புகளின் கீழ் தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இந்த விவகாரம் தொடர்பில் இரண்டு கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அகழாய்வுகளின்படி இதுவரையில் அந்த மனிதப்புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள், இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அத்துடன், இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளின்போது மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது.

இதன்மூலம் முல்லைத்தீவு – கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அகழாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழாய்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழாய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் சி.சி.ரி.வி. கமரா மற்றும் பொலிஸாரின் கண்காணிப்புகளின் கீழ் மீண்டும் இன்று அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### தெல்லிப்பளையில் இயங்கும்

# இரண்டு சிறுவர் இல்லங்களை மூடுமாறு ஆளுநர் மணிப்புரை

(ந.லோகதயாளன்)

அடிப்படை வசதிகள் இன்றி – பதிவு செய்யப்படாது – சிறுவர் இல்லம் நடத்தி, வெளி மாகாண சிறுவர்களை கொண்டு வந்து தங்க வைத்திருந்தனர் என்ற தகவலின் பெயரில் தெல்லிப்பளையில் இரு இடங்களில் இயங்கிய சிறுவர் இல்லத்தில் இருந்த சிறுவர்களை வேறு பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களிற்கு மாற்றிவிடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

மலையகத்தைச் சேர்ந்த சிறுவர்களை அழைத்து வந்து, கழிப்பறையோ அல்லறு கிணற்று வசதியோ இல்லாத வீட்டில் இல்லம் என்னும் பெயரில் தங்க வைத்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. சிறுவர்கள் தரையில் படுத்துறங்க வைக்கப்பட்டனர் எனவுன் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று மற்றுமோர் இடத்தில் பாடசாலை ஒன்றின் பொறுப்பில் இருந்த கட்டடத்தில் – பாடசாலையின் பெயர் பொறிக்கப்பட்ட பாடசாலை விடுதியில் தங்க வைப்பதான படிவம் நிரப்பப்பட்டு – பின் சிறுவர்கள் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற இடத்தில், சுகாதாரத் தன்மைகளும் இன்றி இயங்கிய இல்லத்தை இயக்கியவர் சுகாதார வைத்திய அதிகாரி எனத் தெல்லிப்பளை பிரதேச செயலக சிறுவர் பிரிவு புகைப்பட ஆதாரங்களுடன் அறிக்கையிட்டதன் பெயரிலேயே ஆளுநர் இந்த அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த சிறுவர்களின் பெயரில் பாடசாலை நிர்வாகமும், இல்ல நிர்வாகமும் தனித்தனியே நிதி திரட்டிய சந்தேகம் எழுவதோடு வைத்தியர் மற்றும் கல்லூரி அதிபர் ஆகியோர் அங்கம் வகிக்கும் நான்கு அமைப்புக்கள் ஊடாக நிதி திரட்டல் இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்ப கட்ட இடையீட்டல் ஊடாக அறிய முடிகின்றது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த விடயத்தை ஒட்டி, வடக்கு ஆளுநரின் ஊடகப் பிரிவும் நேற்று செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:-

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில், கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய, இரண்டு இல்லங்களையும் உடனடியாக மூடுமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மகளிர் இல்லம் ஒன்றில் பொருத்தமற்ற இடத்தில் நிறுவப்பட்ட சி.சி.ரி.வி கமராக்கள் தொடர்பிலும், பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லம் தொடர்பிலும் அபயம் பிரிவிற்கு முறைப்பாடு கிடைத்தது. அபயம் பிரிவினரால் கோரப்பட்டதற்கு அமைய தெல்லிப்பளை பிரதேச செயலாளரால் ஆளுநருக்கு, களவிஜய விசாரணை அறிக்கை சமர்பிக்கப்பட்டது. இந்த அறிக்கைகளின் பிரகாரம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் குறித்த இரண்டு இல்லங்களையும் மூடுமாறும், விடயம் தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, வடக்கு மாகாணத்திற்குள் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யாது இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளை பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# ஜூலை 21 இல் உலக சாதனைக்கு தயாராகும் ஒப்பனைக் கலைஞர்கள்

எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி ஒப்பனைக் கலைஞர்களால் ஓர் உலக சாதனை நிகழ்வு நிகழ்த்தப்படவுள்ளது.

கொழும்பு சாமுத்திரிகா மேக்கப் ஸ்டூடியோ அகாடமியின் ஏற்பாட்டிலும் ஆருயு கிளப் லங்காவின் இணை அனுசரணையுடனும் இலங்கையின் பல மாவட்டங்களிலிருந்தும் முன்னணி ஒப்பனைக் கலைஞர்களும் பயிற்சி பெற்ற ஒப்பனைக் கலைஞர்களும் மொடலிங் துறையைச் சேர்ந்த கலைஞர்களும் ஒன்று சேர்ந்து இந்த உலக சாதனையை நிகழ்த்த உள்ளனர்.

இந்த உலக சாதனை தொடர்பான தெளிவூட்டல் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள சாமுத்திரிகா மேக்கப் ஸ்டூடியோ அகாடமியின் தலைமையகத்தில் அதன் தலைவர் திருமதி அனு குமரேசனால் அண்மையில் நடாத்தப்பட்டது.

இதன் போது அனு குமரேசன் கருத்து தெரிவிக்கையில்,




“பல உலக சாதனை பதிவு நிறுவனங்களின் அனுசரணை பெற்ற ஐக்கிய அமேரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, வியட்நாம் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற “ஏசியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்“இன் சாதனைப் புத்தகத்தில் எமது ஒப்பனைக் கலைஞர்களின் உலக சாதனையை பதிவு செய்ய சகல ஏற்பாடுகளையும் நாம் செய்துள்ளோம்.

அத்துடன், 250 இற்கும் மேற்பட்ட ஒப்பனை நிகழ்வுகள் குறிப்பிட்ட நேர அடிப்படையில் ஒப்பனைக் கலைஞர்களால் பிரமாண்டமான சாதனையாக நிகழ்த்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தொழில் வல்லுநர்களான ஒப்பனை கலைஞர்களும் இவர்களோடு வெளிநாட்டைச் சேர்ந்த ஒப்பனை கலைஞர்களும் ஒப்பனை ஆர்வலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். விசேடமாக 17 வயதிற்குட்பட்ட மாணவர்களையும் உள்வாங்கி இந்த சாதனையை நிகழ்த்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த சாதனை நிகழ்வை சாதனைப் புத்தகத்தின் நடுவர்கள் நேரடியாக கண்காணிப்பதோடு இணைய வழியூடாகவும் நிகழ்நிலை நேரலையூடாகவும் பதிவுகளை மேற்கொள்ளவுள்ளதோடு பல்வேறு நாடுகளில் இருந்தும் கலைஞர்கள் நேரடியாகவும் நிகழ்நிலையூடாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த சாதனைக்கான சான்றிதழும் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் அன்றைய தினமே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படவுள்ளன.”– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.07.2024




உங்களிடம் தேவையில்லாத உணர்வுகள் காணப்படும். அதை நீங்கள் தவிர்க்க வேண்டும். உங்கள் முயற்சியில் வெற்றி பெற தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை காணப்படும். பணிநிமித்தமான பயணங்கள் இருக்கும். சகபணியாளர்களுடன் மோதலைத் தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. அகந்தை உணர்வு காணப்படும்.இதனால் குடும்பத்தின் அமைதி கெடும்.

இன்று நிதி ஆதாயம் குறைந்து காணப்படும்.தேவையற்ற செலவினங்களை கண்காணியுங்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று வளர்ச்சி குன்றிக் காணப்படும். பொறுமையும் உறுதியும் அவசியம். நல்லதையே எண்ணுங்கள்.

இன்று பணியைப் பொறுத்தவரை உற்சாகமான நாளாக இருக்காது. பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

குடும்ப அங்கத்தினர்களிடையே பிணைப்பை வலுப்படுத்த முயற்சி எடுப்பீர்கள். உங்கள் முயற்சியை மென்மையாகக் கையாளுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக இன்று உங்கள் பணம் வீணாகச் செலவாகலாம். உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்துக்காக இன்று நீங்கள் செலவு செய்ய நேரலாம்.

பதற்றம் காரணமாக தலைவலி காணப்படும். உங்கள் உணவுப் பழக்கத்தை கண்காணியுங்கள்.




உங்கள் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை எனில் இதயம் தளர்ந்து விட வேண்டாம். இன்று சில சௌகரியங்களை இழக்க நேரும்.

உங்கள் பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முறையான நடைமுறையை பின்பற்ற வேண்டியது முக்கியம்.

உறவுமுறை உங்களுக்கு சாதகமாக இருக்காது. விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று செலவினங்கள்அதிகமாக இருக்கும்.பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.செரிமானக் கோளாறு காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.




நீங்கள்இன்னும் அதிக முயற்சி செய்ய வேண்டும். எந்த விஷயங்களுக்கு முதலிடம் தரவேண்டும் என்று உணர்ந்து அதற்கேற்றாற் போல நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணிச்சுமைகளை சந்திக்க நேரும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள். சிறந்த திட்டமிடல் வேண்டும்.

தொடர்பாடல் பிரச்சினை காரணமாக குடும்பத்தில் நல்லிணக்கம் குறையும்.குடும்ப அங்கத்தினர்களுக்காக நேரம் ஒதுக்கி அவர்களிடம் கவனம் செலுத்துவது நல்லது.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணப் பரிவர்த்தனையின் போது கவனமாக இருக்கவும்.

ஆரோக்கியம்சுமாராக இருக்கும்.உங்கள்தோள்களில் காயங்கள் ஏற்படலாம்.




இன்று ஆற்றல் மிகுந்து காணப்படுவீர்கள். எளிதில் வெற்றி கிடைக்காது என்பதனால் திருப்தி காணப்படாது.

பணிநிமித்தமான பயணங்கள் அதிகமாக செய்ய நேரும். இன்று பணியில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உறவில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும்.உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் செலுத்தவும்.

பணத்தைப் பொறுத்தவரை இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

தலைவலி அல்லது பல்வலி உபாதைகள் ஏற்படலாம்.ஆரோக்கியமான உணவு உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது.




சில தடைகளுக்குப் பின் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். செயல்களின் முன்னுரிமையை உணர்ந்து அதன்படி ஆற்றுங்கள்.

பொறுமை கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் வெற்றி அடையலாம்.உங்கள் சக பணியாளர்களிடம் கவனமாக இருங்கள். அவர்கள் உங்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுத்தலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குடும்ப அங்கத்தினர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணவரவுடன் செலவும் சேர்ந்து காணப்படும். சீரான நிதிநிலைமையை தக்கவைத்துக் கொள்ள திட்டமிடல் அவசியம்.




இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்களை காண்பீர்கள்.

உறவின் பிணைப்பு குறைந்து காணப்படுவதால் குடும்பம் பாதிக்கப்படும். உணர்ச்சிவசப்படுவதனால் ஒன்றும் பயனில்லை. உங்கள் பிரியமானவர்களுடன் நேரம் செலவழித்து அவர்களை புரிந்து கொள்ள முயலுங்கள்.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள்காணப்டும். பணப்பரிவர்த்தனையில் கவனமுடன் இருக்க வேண்டும். செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

பற்களில் வலி அல்லது தலைவலி ஏற்படலாம்.உணவு முறையில் கவனம் செலுத்தவும்.




இன்று பொறுமை மிகவும் அவசியம். உங்களிடம் காணப்படும் இசைவற்ற தன்மை தடைக்கல்லாக அமையும்.

இன்று பணியில் சில இறுக்கங்கள் காணப்படும்.தைரியம் மற்றும் உறுதியின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

குடும்ப விஷயங்களில் சூடான விவாதங்கள் நடைபெறும். அமைதியான அணுகுமுறையைப் பராமரிப்பது நல்லது.

இன்று பணவரவுக்குச் சிறப்பான நாளாக அமையாது. கடின உழைப்பை நீங்கள் இன்று நம்ப வேண்டியது அவசியம்.

தோல் எரிச்சல் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.07.2024




இன்று நன்மையும் தீமையும் கலந்து நடக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.தாமதங்களுக்கு வருந்த வேண்டாம்.

பணியல் இறுக்கமான சூழ்நிலைகளை திறமையாக கையாள கற்க வேண்டும். இல்லையெனில் தவறுகள் நேரலாம். பணி நிமித்தமான பயணம் சாத்தியம்.

குடும்பத்தில் பதற்றம் காணப்படும். நல்ல சூழ்நிலையை உருவாக்க நீங்கள்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை உற்சாகத்தை அளிக்கும் வகையில் இருக்காது. பணத்தைப் பொறுத்தவரை உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று உறுதியும் அர்ப்பணிப்பயம் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்.இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

பணியில் தவறுகளை தவிர்க்க கவனமாக பணியாற்றவும். முயற்சியின் மூலம் உங்களுக்கு சாதகமான பலன்களை நீங்கள் பெறலாம்.

குடும்பத்தில் சில சச்சரவுகள் காணப்டும்.பக்குவமான முறையில் விஷயங்களைக் கையாள்வது மிகவும் நல்லது.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பணம் சேமிப்பதை இன்று கடினமாக இருக்கும்.

உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.அதற்காக நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரும்.




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும்.இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பற்றிக் கவலைப் படுவீர்கள்.

நேர்மறையான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்.பொறுப்புகளை திறமையாக கையாள்வதில் தடைகள் காணப்படும்.

உங்கள் குழந்தைகளின் மற்றும் குடும்பத்தின் வளர்ச்சி பற்றிய கவலை காணப்படும். அதிகமாக யோசிப்பதன் மூலம் குழப்பம் தான் மிஞ்சும். எனவே அதிகமாக யோசிக்க வேண்டாம்.

பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.செலவு செய்வதற்கு முன் கவனமாக யோசித்து செயல்படவும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.தோள்களில் வலி காணப்படலாம்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். உங்கள்செயல்களை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பணிச்சூழல் சாதகமாக காணப்படாது.உங்கள் கீழ்பணிவோர்களிடம்பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியை எதிர்பார்க்க இயலாது. பிரச்சினைகளுக்கு நேரம் ஒதுக்கி கவனம் செலுத்த வேண்டும்.

இன்று அதிக பணம்சேமிப்பது கடினம். ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள்குடும்ப அங்கத்தினர்களின் உடல் நிலைக்காக செலவு செய்ய நேரும்.





